Phone No. 4502 Regd. No. M. 5458
விலை அணா ஒன்று] [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி கருத்திதழ்

மணி 1] சென்னை (7—12—49) வெளியீடு 8—12—49) [இதழ் 110

மதுவிலக்கு மாகாணங்களில் 'பர்மிட்' தீபகற்பங்கள்!

'மகாத்மா' சீடர்கள் மதுவிலக்கா நடத்துகின்றனர்?

தங்களைத்தாங்களே ஏமாற்றிக்கொண்டு, தறுதலை நாடகம் ஆடுகின்றனர்!

பழைய வர்த்தகக் கல்லறை மீது புதிய 'வியாபாரம்' முளைக்கிறது!

'மதுவிலக்கு மூலம் சர்க்காருக்கு சந்தேகமின்றி வருமானக் குறைவு நேரிடத்தான் செய்யும். எனினும் மக்களுக்கு இந்நட வடிக்கை மூலம் ஏற்படப் போகும் மாபெறும் நன்மையைக் கவனிக்குமிடத்து, இதனல் ஏற்படும் நஷ்டம் பெரிதல்ல. ஆகவே மனிதாபிமானம் நிறைந்த மாபெரும் பணியில் வெற்றி பெறுவீர்களாக" என்பதாக அன்றையகாங்கிரஸ் தலைவர் ராஜேந்திர பிரசாத்தின்'பாராட்டு நல்லுரையினையும், 'மதுவிலக்கு நமது கொள்கை. அதைக் கைவிடும் எண்ணமே எழும்புவதற்கில்லை. மதுவிலக்கு வெற்றிபெற வாழ்த்துகிறேன்" என்ற சர்தார் பட்டேலின் வாழ்த்துச் செய்தியினையும், 'நாட்டுக்கே நாம் வழிகாட்டியிருக்கிறோம்' என்ற சி. ஆரின் உற்சாக மொழியினையும், இன்னும் நாட்டுத்தலைவர்கள், பெரியோர்கள் அறிஞர்கள் ஆகியோரின் ஆதரவு நல்லுரைகளையும், ஏழைப் பாட்டாளிக் குடும்பங்களின் இதய பூர்வமான நன்றி மொழிகளையும் சுமக்க முடியாது சுமந்து கொண்டு கடந்தவாண்டு அக்டோபர் இரண்டாம் நாளில் மாகாணமனைத்துக்கும் முழு மதுவிலக்கு கொண்டுவந்தது சென்னை சர்க்கார். பொது மக்களும் பொறுப்புணர்ந்தோடும் பூரித்தனர்.

'டாக்டர் சர்டிபிகேட் மீது ரு. 50 கட்டி விட்டால், யாரும் குடித்து மகிழலாம்' என்பதாக அன்றும், 'சர்டிபிகேட் கூட தேவையில்லை ரு. 500 கட்டிவிட்டாலே போதும், குடிக்கலாம்' என்பதாக இன்றும் தங்களது சட்டத்துக்குத் திருத்தங்கள் அடுக்கிக் கொண்டு செல்கின்றனரெனின், சர்க்காரின மதுவிலக்குக் கொள்கை கடந்த ஓராண்டில் எந்த அளவுக்குச் சரிந்து வந்து கொண்டிருக்கிற தென்பதற்கு வேறு எடுத்துக்காட்டும் தேவையோ எனக் கேட்கிறோம்.

காந்தி பக்தர்களின் மதுவிலக்குக் கொள்கையின வண்டவாளமும், புரட்டும் அம்பலமாகும் வகையில் 'பிளிட்ஸ்' பத்திரிகை தந்திருக்கும் கருத்துரைகளைக் கீழே தருகிறோம்;

மதுவிலக்குக் கொள்கையினின்றும் பின்வாங்கப் போவதில்லை யென்று நம் ஆட்சியாளர்கள் அடுத்தடுத்து உறுதி தந்து வருகின்றனர்.

'காந்தி காத்துப்படிக்கான முழு-மொத்தமான—அறை குறையில்லாத-மதுவிலக்கு அமுலுக்கு வந்தே தீரும்' என்று வலியுறுத்தியிருக்கின்றனர்.

தங்களது மேலான பெயர்களுக்கு முன்னதாகக் 'கனம்' என்ற அடைமொழியையேந்தி நிற்கு மந்திரிகள் மக்களுக்காக கொடுத்து வக்கும் 'மகாத்மா' நினைவுக்கு அளிக்கக்கூடிய மரியாதையும் இதுவேயாகும்.

வாக்குறுதி கண்ணியமாய்க் காப்பாற்றப்படுமென்று நம்பினோம்; காந்தியார் நினைத்தபடி முழு-மொத்தமான-அறை குறையில்லாத மதுவிலக்கு வருமென்றே நினைத்தோம்; கலால் வரிமூலம்வந்த 'பாவம் நிறை பணம்' மகாத்மாவுக்குப் பெருத்த மனவேதனையை மூட்டி வந்தது போல, அவருடைய 'சிஷ்ய கோடி'களுக்கு வேதனை தந்திருக்குமெனக் கருதினோம்.

ஆனால் இப்போது நாம் காண்பதென்ன?

முழு-மொத்தமான - அறை குறையில்லாத மது விலக்கு பீத்தல் நிறைந்த பழங்கந்தல துணியைப்போல்காட்சியளிக்கிறது-பெருங் கிழிசல்கள் நிறைந்து காணப்படும் அத்துணி, காந்தி நினைவை நம் மனதைவிட்டகற்ற துடைப்பானாகப் பயன் படுத்தப்படுகிறது நம் மந்திரிகளால்!

மாகாணங்களிலுள்ள ஐரோப்பியர்கள் தங்கள் தங்கள் விருப்பப்படி குடிக்கலாம், பிரயாணப் பிரமுகர்களும் குடிக்கலாம்; படையினரும் குடிக்கலாம்; இன்னும் பல்லாயிரக்கணக்கான 'பெர்மிட் தாரர்கள்' குடிக்கலாம்.

இன்னும் வறண்ட மாகாணத்தின் மத்தியிலுள்ள உத்தம நீர் நிறை தடாகங்களுக்குக் கப்பம் கட்டக்கூடிய பிரமுகர்களெல்லாம் குடிக்கலாம்.

விமான நிலையங்களில், கப்பல் தளங்களில், இரயில்வே நிலையங்களில் மதுவிலக்கு கிடையாது; அன்றியும், விசேஷ பெர்மிட் - அறைகளையும் கொண்டு திகழும் ஹோட்டல்கள்; இத்தகைய 'பெர்மிட் தீவுகள்' கள்ளத்தனமாய்ப் பதுக்கல் வேலைகளிலீடுபடுவோரின் பாதுகாப்பு நிலையங்களாக மாறப்போவது ஒருதலை.

இன்னும்-இவையனைத்திலும் முக்கியமானது-மகாத்மாவின் சீடர்கள், கலால் வருமானங்கள் மூலம் 'பாவம் நிறை பணத்தைத்'தொடர்ந்து வசூலித்துக்கொண்டுதானிருப்பர். இவ்வுண்மையைத் தெளிவாக்க அவர்கள் பாடுபட்டிருக்கின்றனர்!

எனவே, பழைய வர்த்தகத்துடன் கல்லறையின் மீதிலேயே 'வியாபாரம்' தொடர்ந்து நடைபெறும்.

தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளும் அடிமுட்டாள்கள் தாம் இந்நாடகத்தை மதுவிலக்கு என்று பெயரிட [illegible]

உணர்வுகொண்ட உழவர்கள், நிலத்தை உரிமையாக்கிக்கொள்கின்றனர்

ரோமில் போலீஸ் பட்டாளம் கைவரிசை

ரோம், டிச. 6—

இத்தாலியில் நிலங்களை விவசாயிகள் ஆக்ரமித்துக்கொள்வது நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. ரோமுக்குத் தெற்கில் நில ஆக்கிரமிப்பு நடைபெற்றுவருகிறது. இவைகளைத் தடுக்க ஏராளமான போலீஸ்படை ரோமிலிருந்து மோட்டார்களில் பல இடங்களுக்குச் சென்றிருக்கிறது. ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டுவருகின்றனர்.

இல்வாழ்க்கைப்பயிற்சி

லண்டனுக்கருகிலுள்ள ஒரு பள்ளி கூடத்தில் படிக்கும் வயதுவந்த மாணவிகளுக்கு இல்வாழ்க்கையை நடத்துவதெப்படி, காதலிப்பது எப்படி முதலிய விஷயங்களை, தக்கவர்களால் கற்பிக்கப்படும் என்று தெரிகிறது. —ரூனோப்.

இந்த நிலையில் இதுவொரு கேடா!

[illegible] மீண்டும் தலைவராக வருமாறு கோருவதென்று [illegible]ன் கூட்டு நிர்வாகக் கமிட்டி முடிவு செய்துள்ளதாம்.

பெருத்த அளவில் சணல் சாகுபடி

திருவாங்கூர்-கொச்சி யூனியன் பகுதியில் பெருத்த அளவில் சணல் சாகுபடி செய்வதற்கான திட்டத்தை, மேற்படி யூனியன் சர்க்கார் மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்திய சர்க்காருடன் இணைந்தே இத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறதாம். அடுத்த பெப்ரவரியில், மொத்தத்தில் 24,000 ஏக்கர்களில் சணல் சாகுபடி செய்யப்படுமெனத் தெரிகிறது.

ஜனநாயகத்தில் நம்பிக்கை; அமைதியில் ஆர்வம்

;0:

'ஜாப்' மன நிலையில் மாற்றம் பற்றி தொழில் வல்லுநர் தூதுக குழு

புது-டில்லி, டிச. 6—

"பலாத்காரத்தின் தீமைகளை சென்ற போரில், பெரும் செலவில் அறிந்துகொண்டு விட்டோம். இனி ஜப்பான் அஹிம்சையையே முழுமையும் கடைபிடிக்கும்" என்று ஜப்பானிய டெகனிஷிய தூதுக் குழுத் தலைவர் தோழர் எம். எம். எனெமோடோ குளோப் நிருபருக்களித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும்கூறியதாவது, இந்தியாவிடமிருந்து ஜப்பானுக்குக் கிடைத்துள்ள கலாசாரம், நாகரிகங்களுக்கு நாங்கள் பதில் சேவை செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். எங்கள் புது அரசியலமைப்பில்கூட சர்வ தேச தகராறுகளைத் தீர்க்க போர் ஒரு வழி என்பதை அறவே நீக்கியிருக்கிறோம். நாங்கள் அமைதியையே நாடுகிறோம். ஜனநாயக முறையே சிறந்தது என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டு விட்டது. எங்கள் கைத்தொழில் பலத்தையே நம்பி நாங்கள் வாழ விரும்புகிறோம்!

'நாட்டை அழிவுப்பாதைக்குக் கடத்திச் சென்றுவிட்டனர்'

:0:

அட்லி சர்க்கார் மீது சர்ச்சில் கட்சி குற்றச்சாட்டு!

"தொழிற் கட்சியினர், பிரிட்டனை உலகிலேயே பெருங்கடன்கார நாடாக்கிவிட்டனர்; இனறைக்குப் பங்கீட்டு முறையில் 'தகிடுதத்தம்' செய்து பிரிட்டனைத் தவிக்கச் செய்து விட்டனர்; வகைதுறையின்றி பணத்தைச் செலவழித்து, பவுண்டு ஸ்டர்லிங்கின் மதிப்பையே குலைத்து விட்டனர்; இன்றியமையாச் சாமான்களின் விலையை யெல்லாம் ஏற்றினர்; திறனற்ற ஊசலாடும் அயல் நாட்டுக்கொள்கையைக் கொண்டிருக்கின்றனர்; பொதுவாக, நாட்டையே அழிவுப்பாதைக் கொண்டு செலுத்திவிட்டனர்"

என்பதாக பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ்கட்சியினர் தங்கள்கருத்துக்களை விளக்கிநீண்டதொரு புத்தகம்வெளியிட்டுள்ளனர். கன்சர்வேட்டிவ்கள் ஆராய்ச்சி இலாகாவால் வெளியிடப் பெற்றிருக்கும், இப்பெரும் புத்தகத்துக்கு (தேர்தல்) "இயக்க வழிகாட்டி" என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் பொதுத்தேர்தலையொட்டியே இப்புத்தகம் வெளியிடப் பெற்றிருக்கிறது.

காமன் வெல்த் மாநாடு நிதிப் பிரச்னையையும் தொடுமா?

லண்டன், டிச. 6—

கொழும்பில் ஜனவரி மாதத்தில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டின் [illegible] பேச்சுகளும் நடைபெறும் என்று [illegible] வட்டாரங்களில் கூறப்படுகிறது.

லண்டனில் நடைபெற்ற நிதி மந்திரிகள் மாநாட்டில் செய்யப்பட்ட சில முடிவுகள், அதன் பின் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து இங்கு விவாதிக்கப்படலாம் என்று தெரிகிறது. ஆனால் [illegible] இலங்கை [illegible] கண்டிக்கப்படலாம் என்றும், அதைச்சமாளிக்க ஆஸ்திரேலியா தயாராக இருக்க வேண்டும் என்றும் 'பைனான்ஷியல் டைம்ஸ்' மெல்போர்ன் நிருபர் எழுதினர்.

எட்டு மடங்கு மொத்த வருமானம்!

ஐ. நா. ஜமீன்தாரர்கட்கு நஷ்டஈடு

ஜமீன்தாரர்களுக்கு ஆண்டு தோறும் கிடைத்து வந்த மொத்த வருமானத்தைப் போன்று, எட்டு மடங்குத் தொகையை அவர்களுக்கு நஷ்டஈடாகத் தருவதென, ஐக்கிய மாகாண ஜமீன்தாரி ஒழிப்பு பற்றிய கூட்டுப் பொறுக்குக் கமிட்டி முடிவு செய்துள்ளது.

கமிட்டி கூட்டத்துக்கு, பிரதமர் பண்டித கோவிந்த வல்லப பந்த் தலைமை தாங்கினர்,

மாலை மணி

சென்னை 7—12—49 புதன்கிழமை

கெஞ்சி அல்ல, மிஞ்சி!

மொழிவழி மாகாணம் அமைய வேண்டும் என்ற உணர்வு, இந்தியத் துணைக் கண்டத்தில், மற்றெல்லா பகுதிகளையும் விட, தென்னாட்டில் தலை தூக்கி நிற்கிறது.

மொழிவழி மாகாணம் உருவாக வேண்டும் என்று, எந்தக் காங்கிரஸ் இயக்கம் இதுநாள் வரையில் குரலெழுப்பி வந்ததோ, அந்தக் காங்கிரசைச் சேர்ந்தவர்கள்தான் இன்று, பெருவாரியாக நின்று மொழிவழி மாகாணம் கேட்கின்றனர்; அதே சமயத்தில், அதே காங்கிரஸைச் சேர்ந்த தலைவர்கள் அந்த எண்ணத்தைத் தடுத்து வைக்க பெரும்பாடு படுகின்றனர்.

மொழிவழி மாகாணம் உருவாக வேண்டுமென்று அப்பொழுதெல்லாம் சொல்லி வந்ததற்குக் காரணம், பிரசார முறைக்குத் தான் என்றும், அது ஆட்சி முறைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியது அன்று என்றும், கவர்னர் ஜெனரல் தோழர் சி இராசகோபாலாச்சாரியார் இப்பொழுது புதுவிளக்கம் கொடுத்து வருகிறார். மொழிவழி மாகாணம் பிரிவதைத் தாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை யானாலும், அமைதியான முறையில், பெரும்பாலான மக்கள் மொழிவழி பிரிந்து வாழ விரும்புவாராயின், அதற்குத் தாம் இணங்குவதாகவும், யாரையும் தூண்டியோ அல்லது வற்புறுத்தியோ மாகாணத்தைப் பிரிவினை செய்ய தாம் விடும்பவில்லை என்றும், தோழர் பண்டித நேரு பகர்கிறார் இவ்வாறு தலைவர்களின் எண்ணம் இருக்க, மொழிவாரி மாகாணக் காங்கிரஸ்காரர்கள் மொழிவழி மாகாண அமைப்புக்கு அரும்பாடுபடுகின்றனர். இந்த விசித்திர நிலைமைக்குள்ளே கிடந்து உழல்கின்றது தென்னாடு!!

நம்மைப் பொறுத்த வரையில், மொழிவழி மாகாணம் அமையவேண்டும் என்பதை வற்புறுத்திதான் வருகிறோம். அதே பொழுதில் திராவிடக் குழுமொழி மாகாணங்கள் நான்கும் ஒன்றுக இணைந்து-வடநாட்டினின்றும் பிரிந்து நின்று, தனிக் கூட்டாட்சி செலுத்துதல் நலம் என்பதை வலியுறுத்தி வருகிறோம்.

இப்பொழுது ஆந்திர மாகாணம் அமைய ஒரு வகையில் வழி வகுக்கப்பட்டு விட்டதைக் கண்ட கர்நாடக, கேரள மாகாணத்தார் தாமும் அவ்வாறே பிரியவேண்டும் என்ற திட்டத்தை, அழுத்தந்திருத்தமாக வெளியிட்டு வருகின்றனர். கர்நாடகக் காங்கிரஸ்காரர்கள், தம் விருப்பத்தை அ. இ. காங்கிரஸ் காரியக் கமிட்டி நிறைவேற்றி வைக்க மறுக்கிறது என்ற காரணத்தைக் காட்டி, வெறுப்பின் அறிகுறியாக, மத்தியிலும்-மாகாணத்திலும் தாம் தாம் வகித்துவந்த சட்டசபை உறுப்பினர் பதவிகளை இராஜிநாமா செய்து வருகின்றனர். கர்நாடக மாகாணம் பிரிய வேண்டுமென்பதிலே அவர்கள் கொண்டுள்ள ஆசையையும், அந்த ஆசை நிறைவேறுவதற்கில்லை என்று அறியும் போது கொள்ளும் ஆத்திரத்தையும் இந்த நிகழ்ச்சி தெற்றென விளக்குகிறது.

மொழிவழி மாகாணம் அமையவேண்டும் என்பதிலே கர்நாடகரும்-கேரள நாட்டினரும்-ஆந்திரரும் கொண்டுள்ள ஆசையை யாரும் வெறுப்பதற்கோ-மறுப்பதற்கோ இல்லை. தமிழர்கள் தமிழகத்தைத் தனியே பிரித்து வைத்துக் கொள்வதற்கான முயற்சி-திட்டம் தீட்டும் வடிவில் ஏதும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், தனி மாகாணம் அமைய வேண்டும் என்பதிலே ஆவலுள்ளவர்கள்தாம்.

மொழி வழி மாகாணங்கள் காணுவதற்கு முன்பு, இந்நான்கு மொழியினரும் செய்ய வேண்டிய முதற் செயல், முறை கெட்டுப் பரந்து கிடக்கும் சமஸ்தானங்களை அடியோடு அழிப்பதுதான். சமஸ்தானத்தின் எல்லைக் கோடுகள் அழிக்கப்பட்டு, ஏனைய பகுதிகளோடு அவை இரண்டறக் கலந்து, மொழி வழி பிரிந்து இனவழி-திராவிடமாக இணைந்து, தனி நாடாக நிற்கத் தலைப்பட்டால்தான், இன்ப வாழ்வுக்கான திட்டம் தீட்ட முடியும். திராவிடம் மொழிவழி நான்கு மாகாணங்களாகப் பிரிந்து சிறந்து விளங்க வேண்டுமானால், திருவாங்கூர்-கொச்சி - மைசூர் - ஐதராபாத் ஆகிய சமஸ்தானங்கள் உருத் தெரியாமல் அழிக்கப்பட வேண்டும். அது இல்லாத வரையிலும்-திராவிடம் தனியாகப் பிரியாதவரையிலும், முறையே மொழிவழி மாகாணங்கள் உருவாகவும் இயலாது நல்வாழ்வு வாழவும் முடியாது

கர்நாடகர்கள் மொழிவழி மாகாணம் கேட்பதற்குமுன மைசூர் சமஸ்தான ஆட்சி முறையை மாற்றவும், வடநாட்டினின்றும் தனியே பிரிந்து நிற்கவும் முயலவேண்டும். அதுபோன்றே கேரளர்கள் திருவாங்கூர்-கொச்சி சமஸ்தான எல்லைகளைக் கலைத்து விடவும் வடநாட்டினின்றும் பிரிந்து வாழவும் முயலவேண்டும். "சமஸ்தானங்கள்" என்ற புகைப்படலம் நீக்கப்பட்டு விட்டால், கன்னடம் பேசுவோர் கர்நாடகத்தில் இணைந்து நிற்கலாம்; தெலுங்கு மொழி பேசுவோர் ஆந்திரத்தில் ஒன்றி நிற்கலாம்; மலையாளம் பகர்வோர் கேரளத்தில் சேர்ந்து நிற்கலாம்! தமிழ் வழங்குவோர் தமிழகத்தில் கூடி நிற்கலாம். அப்படிப் பட்ட முயற்சி எடுக்கப்படாத வரையில், மொழிவழி மாகாணத்திற்குப் பொருள் ஏற்படாது. அப்படி மொழிவழி பிரிந்த மாகாணங்கள், ஒன்றுக இணைந்து, தனித் திராவிடக் கூட்டாட்சியாக மலராவிடில், மொழிவழி மாகாணப்பிரிவினையால் பலன் ஏற்பட்டதாக ஆகாது.

எனவே மொழிவாரி மாகாணப் பிரிவினையில் முனைந்து நிற்கும் கர்நாடக-கேரள-ஆந்திர அன்பர்கள் முதலிலும் அதனை அடுத்தும் செய்ய வேண்டிய இன்றியமையாத கடமைகளைச் செய்ய முன் வருவார்களாக! அப்படி அவர்கள் தத்தம் கடமைகளைச் செய்ய முற்படும்போது, தமிழர்கள் நிச்சயம் மொழிவழி-திராவிடநாட்டுப் பிரிவினைக்குப் பேராதரவு நல்குவார்கள்!

ஒரே மொழியினர், வேறு வேறு ஆட்சிகளில் சிதறிக் கிடக்காமல், ஒன்றுகஇணையச் செய்யும் கடமையைச் செய்ய கர்நாடகர்கள் முன் வந்தால், அடுத்து அடுத்துச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து முடிக்க ஏதுவாகும் கர்நாடகர்கள் தங்கள் மொழியுணர்ச்சியையும், இனஉணர்ச்சியையும் ஆத்திரவழியில் செலுத்தாமல், அறிவுடைமை வழி செலுத்த வேண்டும் செலுத்தின், முடிவு, இன்பத் திராவிடமாகத் தானிருக்கும்.

வட இந்திய மத்திய ஆட்சியைக் கெஞ்சிக்கேட்டு வாழும் நிலைக்கு ஆளாகாமல், நமமே, தனுட்சிக்கொண்டு, நமது நலத்தை மிஞ்சித் தேடிக் கொண்டு வாழ முற்படவேண்டும் அந்த முடிவைக்காண திராவிடக் குழுமொழியினர் பாடுபடுவார்களாக!

அறிவுக் கதிர்!

முன்னேற்றத்திற்கு எப்பொழுதும் தடையாகவுள்ள புரோகிதர்களைப் புறக்கணியுங்கள். அவர்கள் உள்ளத்தை மாற்ற முடியாது; அவர்கள் உள்ளம் ஒரு போதும் விரியாது. அவர்கள் சென்ற பல நூற்றுண்டுகளாக இருந்துவரும் மூடநம்பிக்கை கொடுமை இவற்றினின்றும் தோன்றியவர்கள். அதனுல் முதலில் புரோகிதத்தையே சமூகத்திலிருந்து களைந்து எறியுங்கள். வாருங்கள்; நெடுந்தொலைவு சுற்றிப்பாருங்கள். பிறநாடுகள் எவ்வாறு முன்னேறிச் செல்கின்றன என்பதைக் கவனியுங்கள் நீங்கள் உங்களைப் போல் உள்ள மனிதரை நேசிக்கின்றீர்களா? உங்கள் நாட்டை நேசிக்கின்றீர்களா? நேசிப்பதாயின் வாருங்கள் எளியவர் மேல் இரக்கம், அவர்களது பசித்த வயிற்றுக்கு உணவு அறியாமை இருளில் ஆழ்ந்துள்ள மக்கட்கு அறிவு உங்கள் முன்னேரால் விலங்கு நிலைக்குக் கொணரப்பட்டுத் தாழ் நிலையில் உள்ள ஏழை மக்களை மனிதராகச்செய்யும் முயற்சி, இவை—அனைத்தும் இன்று வேண்டற்பாலன. நாம் உயரிய நோக்கங்கட்காக உழைப்போம் பின்னுல் திரும்பிப் பார்க்க வேண்டாம். உங்கள் உயிர்க்கு இனியரானவர் எழுதாலும், பின் நோக்கம் வேண்டாம் முன் நோக்கமே வேண்டற்பாலது!

—விவேகானந்தர்

முகவரி மாற்றம்

தோழர் இரெ. இளம்வழுதி அவர்களுக்கு அஞ்சல் விடுபோர் கீழ்கண்ட முகவரிக்கு விடுக்கவும்.

முகவரி:—

இரெ. இளம்வழுதி
17, தாணப்பச் செட்டித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

அறிக்கை

20-11-49-ல் வ. . வேலூரில் திராவிடர் கழகத்தின் சார்பாக நடைபெற்ற பெரியார் கூட்டத்தில் நடைபெற்ற சம்பவம் குறித்து அதிகாரபூர்வமான உண்மைத்தகவல் அனுப்பும்படி நான் கோரியிருந்ததையொட்டி வேலூர் திராவிட முன்னேற்றக்கிளைக் கழகத்திலிருந்து விபரமான அறிக்கை வந்து சேர்ந்தது.

நான் அறிக்கையைப் பரிசீலனை செய்து, தோழர் இரத்தினவேலு நடந்து கொண்டது. வண்டாரவெறு செயலாகவும், முன்னேற்றக் கழகத்தின் கண்ணியத்திற்குக் கறையுண்டாக்குவதாகவும் இருக்கக் கண்டேன். அதன் பேரில் கமிட்டியிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு அன்னாரை நீக்கிவைக்கும்படி கிளைக் கழகத்தைப் பணித்திருந்தேன்.

வேலூர் நகரக்கிளை கழகம் 27—11—49-ல் கூடி அந்தத்தோழர் மீது நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிக்கை மூலம் அறிவிக்கப் பட்டுள்ளேன்.

தோழர் இரத்தினவேலு செய்ததெல்லாம் பெரியாரிடம் நேருக்கு நேர் நின்று கேள்வி கேட்டார் என்பதே யாகும். அந்தச் செயல், குழப்பம் ஏற்பட ஏதுவாக இருந்தது என்று சுட்டிக்காட்ட இடமளிப்பதாக இருப்பதாலும், முன்னேற்றக் கழகத்தினர் கையாளும் நேரிய பண்புக்கு அது உகந்ததல்ல என்று கருதுவதாலும், இனியும் இம் மாதிரியான செயல் தவறி நிகழக்கூடாது என்று எண்ணுவதாலும் அன்னார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

முன்னேற்றக் கழகத்தின் கண்ணியம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதையொட்டி, நடவடிக்கை எடுத்து நல்ல பாதை காட்டிய வேலூர் நகரக்கிளைக் கழகத்தார்க்கு நமது பாராட்டுதல்!

சி. என். அண்ணுதுரை,
பொதுச்செயலாளர்
தி. மு. க.—சென்னை
6—12—49.

அரிசி விளையும் நாடுகளில் கம்யூனிஸ்டுகள் அதிக கவனம்

—: (0) :—

லண்டன், டிச. 6—

சீனவில் ஏற்பட்ட வெற்றியைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட்கள் அரிசி ஏராளமாக விளையும் நாடுகளான சயாம், இந்தோ-சீன, பர்மா மீது அதிக கவனம் செலுத்தி வருகின்றனர் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது. ஆசியாவைத் தங்கள் ஆட்சிக்குள் உட்படுத்த, இந்த முக்கியம் வாய்ந்த பிரதேசங்களைக் கைபற்றினுல் போதும் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிருர்கள் என்று தெரிகிறது

சயாமில் இந்த நெல் உற்பத்தி, பெரும்பாலும் சீனர்களிடமே இருந்து வருகிறது. கம்யூனிஸ்ட் ஏஜெண்டுகள் இவர்களிடையே சுறுசுறுப்பாக, பிரசாரம் செய்து வருவதாகத் தெரிய வருகிறது

பிரபல பிரிட்டிஷ் பத்திரிகாசிரியரான தே மூர்ஹௌஸ் பார்ட்லெட் இந்த நிலை குறித்து எச்சரித்திருப்பதாவது.—

பர்மா, சயாம், இந்தோ-சீன அரிசியால் தான், தென் கிழக்கு ஆசியாவில் லட்சக் கணக்கான மக்கள் உயிர் வாழ முடிகிறது. மத்திய கிழக்கில் எண்ணெயை உத்தேசித்து நடவடிக்கை எடுக்கும் எதிரிகளைத் தடுப்பதை விட, அரிசி ஏராளமாக விளையும் நாடுகள் எதிரிவசம் ஆகாமல் தடுப்பது, இன்னும் அதிக முக்யத்துவமாகும். (ருேளாப்)

நான்கே நாட்களில் சந்திர மண்டலத்தை எட்டிப் பிடிக்கலாம்!

லண்டன், டிச. 6—

இன்னும் 40 ஆண்டுகள் கழித்து நான்கு நாட்களில் மனிதன் சந்திர மண்டலம் போய்ச் சேருவது சாத்தியமாகலாம் என்று, பிரிட்டிஷ் அமெரிக்க விஞ்ஞானிகள் எதிர் பார்க்கின்றனர். ராக்கெட் மூலம் பூமியிலிருந்து சந்திரனுக்கு அனுப்புவதைக் காட்டிலும், சந்திரனிலிருந்து பூமிக்கு அனுப்புவது. இன்னும் சுலபம் என்று அவர்கள் கருதுகிருர்கள். இந்த 40 ஆண்டுகளுக்குள் இது விஷயமான ஆராய்ச்சிகள். இன்னும் அதிகரித்தியலாபலாம் என்று இவர்கள் எதிர் பார்க்கின்றனர். —ருேளாப்

லார்ட் பாயிட் ஆர்ருக்கு நோபில் பரிசு

லண்டன், டிச. 6—

உணவு விவசாய ஸ்தாபனத்தின் டைரக்டர் ஜெனரலான லார்ட்பாயிட்ஆர் நனகாளிக்கப்பட்ட நோபின் பரிசை சனிக்கிழமை யன்று பெறவிருக்கிருர். சனிக்கிழமையன்று இந்த பரிசளிப்பு விழா ஆஸ்லோவில் நடைபெறவிருக்கிறது. ஒரு மெடல், ஒரு சர்டிபிகேட், 8000 பவுனுக்கு ஒரு செக் இம்மூன்றும் பரிசளிக்கப் படும். நோபின் பட்டமளிப்பு விழா பிரசங்கத்தை நார்வே மன்னர் கேட்பார்.

நார்வே விவசாய காலேஜ், பாயிட்ஆர்ருக்கு டாக்டர் பட்டத்தை அளிக்கவிருக்கிறது. இப்பரிசை ஏற்படுத்திய ஆல்பிரட் நோபல் மறைந்த தினம் டிசம்பர் 10-ந்தேதி யன்று வருகிறது. அன்றுதான் இப்பரிசளிப்பு விழா நடைபெறவிருக்கிறது.

நல்ல திட்டந்தானும்; ஆனல் நடைமுறைக்கு ஒவ்வாதாம்!

கம்யூனிசம் வந்தால் கஷ்டங்கள் தொடருமாம்!

பண்டித நேருவின் பொருந்தாவுரைகள்

“இந்தியாவில் இப்போதுள்ள பெரிய பிரச்னை உற்பத்திக் குறைவு, செல்வமின்மை, செல்வம் சரியானபடி விநியோகிக்கப்படாமலிருப்பது ஆகியவைகளை சமாளிப்பது தான். ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பு பலனளிக்கும் என்று தர்க்க ரீதியில் முடிவுக்கு வந்துவிடுவது சுலபம் ஆனல் தேசத்தின் உற்பத்தி சாதனங்களின் தன்மை என்ன; நிபுணத்வம், வசதி என்ன என்பதையும் கவனிக்க வேண்டும். புதிய சமூகத்தை அமைப்பது என்பதனல் இப்பொழுதுள்ள உற்பத்தியை, அதிக காலம் சச்சரவு, குழப்பம் ஆகியவைகளால் கெடுத்துக் கொள்ளவும் நேரும் என்பதையும் கவனிக்க வேண்டும். லட்சியம் நல்லதாக இருக்கலாம், ஆனல் அந்த லட்சியத்தை அடைவது என்பதற்காக பல தலைமுறைகள் துயரம், பஞ்சம், ஏழ்மை ஆகியவைகளில் அவதிப்பட நேரிடும்,”

என்று இந்திய முதலமைச்சர் பண்டித நேரு அண்மையில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார். இது இந்தியாவின் பொருளாதார நிலைமை விளக்கப் பண்டிதர் பேசிய பேச்சின் ஒரு முக்கியமான பகுதியாகும்.

கம்யூனிசம் கூடாது என்பதை விளக்கப் பண்டிதர் இவ்வளவு சுற்றி வளைத்துப் பேசுகிறார். இது, அவரது அமெரிக்க சுற்றுப்பிரயாணத்தின் விளைவோ என்னவோ!

“இந்தியாவில் கம்யூனிசம் சாத்தியமா?” என்று ஒருவர் கேட்டாராம். அதற்குப் பண்டிதர் தரும் பதில் தான் மேலே தரப்பட்டிருப்பது.

ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பு முறை மூலம், இந்தியாவின் தற்போதைய பிரச்னைகளான உற்பத்திக் குறைவு, செல்வம் சரியானபடி விநியோகிக்கப்படாமலிருப்பது ஆகியவைகளை சமாளிக்க முடியும் என்று தர்க்கரீதியில் முடிவுக்கு வருவது சுலபம், ஆனல் நடைமுறைக்கு ஒத்துவராது என்றும் கூறுகிறார்.

இங்ஙனம் ஒரு பொருளாதாரக் கொள்கை தர்க்க ரீதிக்கு ஒத்து வந்து, நடைமுறைக்கு ஒத்துவராது என்று பேசியிருப்பது பண்டித நேரு என்பதை நினைக்கும்போதுதான் வருந்தாமலிருக்க முடியவில்லை. ஒரு சாதாரண அரசியல்வாதி இங்ஙனம் பேசியிருந்தால், அப்படிப்பட்டவர் பேச்சு அரசியல் அரிச்சுவடி அறியாதவர் பேச்சு என்று அலட்சியமாகக் கருதி வாளாவிருந்து விடலாம். ஆனல் பேசியவர் இந்திய முதலமைச்சர்; சிறந்த அரசியல் அறிவு படைத்தவர் என்று அகில உலகிலும் விளம்பரப்படுத்தப்பட்டவர், மேனாட்டுச் சுற்றுப் பிரயாணம் செய்த மேதை, அரசியலும் சரித்திரமும் நன்கு பயின்றவர், சமதர்ம வீரர் என்று இடது சாரிகளால் புகழப்படுபவர், ஒருகாலத்தில் கம்யூனிசத்தின் புகழ்பாடியவர், ஏன், அண்மையில் கூட கம்யூனிசத்தை வரவேற்பதாகவும், ஆனல் கம்யூனிஸ்டுகளின் பலாத்காரச் செயல்களையே வெறுப்பதாகவும் அடுக்கடுக்காய்ப் பேசியவர். அப்படிப்பட்டவர் இப்படிப்பட்ட பேச்சுப் பேசுவதென்றால் நமக்கு ஆச்சரியம் மட்டுமல்ல, அவர் மீது ஐயப்பாடு கூட தோன்றுகிறது.

தோழர் பட்டேல் பேசவேண்டிய விஷயத்தைப் பண்டிதர் பேசுகிறாரே, இது ஏன்? என்ற ஐயம் எழுகிறது.

தர்க்க ரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடிய விஷயம் நடைமுறைக்கு வந்தால் நாசமாம்! சச்சரவு, குழப்பம் முதலியன விளையுமாம்! இது யாருக்கு இருக்கவேண்டிய சந்தேகம். அன்னிய ஆட்சியிலிருந்துகொண்டு, அதிகாரம் கையிலில்லாத நிலையிலே, ஆர்வத்துக்கும் அடக்குமுறைக்கும் இடையிலே இருந்துகொண்டிருப்பாருக்கல்லவோ இத்தகைய எண்ணம் தோன்றும்!

ஆட்சிக்கே அதிபராக இருந்துகொண்டு, அடக்குமுறைச் சட்டங்களுக்கு அனுமதி நிறைவேற்றிவைக்கும் போலீஸ், இராணுவம் முதலியன படை சூழ ஆட்சிப்பீடத்தில் வீற்றிருக்கும் ஒரு சுதந்தரநாட்டுத்தலைவர் தனக்குச் சரியெனப்படும் ஒரு கொள்கையை சட்டரீதியாகப் பொருந்தக்கூடிய கொள்கையை நிறைவேற்ற முடியாது என்று எண்ணுவதை—பேசுவதை என்னவென்று அழைப்பது?

பண்டிதர் நேரு மனது வைத்தால் ஆகாத காரியமுண்டா? சச்சரவு, குழப்பம் முதலியன இல்லாமல் தர்க்க ரீதியாகசரியென தோன்றும் கம்யூனிசத்தை சட்ட ரீதியாக நிறைவேற்ற முடியாதா? கம்யூனிசம் வந்தால் கஷ்டம்தான் வரும் என்று ஏன் நினைக்கவேண்டும்? அப்படிப்பட்ட நம்பிக்கையற்ற தன்மை (Pessimism) நிராசாவாதி என்று அழைக்கப்படும் பண்டிதருக்கு வரக் காரணமென்ன?

வெண்ணெய்யை வைத்துக் கொண்டு நெய்க்கழுவதுபோல், வல்லமை பொருந்திய ஒரு ஆட்சியைக் கையில் வைத்துக் கொண்டு, மக்களுக்கு வாழ்வளிக்கும் ஒரு நல்ல முறையை வகுக்க “ஐயை பதியேன்” என்று வருந்துவானேன்?

இமயம் முதல் குமரி வரை தன் காலடியில் கட்டுப்பட்டுக் கிடக்க வேண்டும் என்று சட்டம் செய்ய தைரியமிருக்கிறது.

அவசரச் சட்டங்கள் மூலம் மக்களின் உரிமையைப் பறிக்க தைரியமிருக்கிறது.

இவ்வளவும் என்னென்று கேட்டால் அதற்கெல்லாம் தக்க பதில் சொல்ல தைரியமிருக்கிறது. ஆனல் தனக்குச் சரியெனப் பட்ட ஒன்றைச் செய்ய தைரியமில்லாமற் போவது ஏன்?

எனவே, இந்தியாவின் பொருளாதார நிலையைச் சீர்படுத்துவதாக நினைத்துக்கொண்டு பண்டிதர் பேசுகிற இத்தகைய பேச்சு சட்ட ரீதிப்படியோ, பகுத்தறிவுப்படியோ, அனுபவப்படியோ எப்படிப்பார்த்தாலும் பொருத்தமற்ற பேச்சு என்று தான் சொல்ல வேண்டும்.

பெல்ஜியத்தில் தாய்ப்பால்பண்ணை

பிரஸ்ஸல்ஸ், டிச. 5—

தாய்ப்பால் இல்லாமல் தவிக்கும் குழந்தைகளுக்காக, தாய்ப்பால் பண்ணை ஒன்றை நடத்த பெல்ஜியத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

தங்கள் குழந்தைகளுக்குப் போதிய அளவு கொடுத்து அதிகமாக பால் உள்ள தாய்மார்கள், தங்கள் பாலை இப்பண்ணைக்கு அனுப்பலாம் ஆனல் அவர்கள் டாக்டர்களால் உடல்நலமுள்ளவர்கள் என்று அங்கீகரிக்கப்படவேண்டும்.

இந்தப் பால் நன்கு சுத்தம் செய்யப்பட்ட பின்பே, உபயோகத்திற்கு அனுமதிக்கப்படுகின்றது. ஒரு ‘பின்ட்’ பாலுக்கு 8 ஷில்லிங், தாய்மார்களுக்கு கொடுக்கப்படுகிறது.

பால் தரும் தாய்மார்கள் வாரம் ஒருமுறை உடல் நலம் கெடாமல் இருக்கிறதா என, மருத்துவ பரிசோதனைக்குள்ளாக வேண்டும். தங்கள் குழந்தைகளுக்குப்பால்கொடுத்து அதிகப் பால் தங்களால் தரமுடியும் என்பதை ரூபித்தாக வேண்டும்.

தாய்மார்களில் சிலர் வாரத்திற்கு 1 பவுன் இதன் மூலம் சம்பாதிக்கின்றனர். ஒருமாது, ஒரு வாரத்தில் 6 பவுன் சம்பாதித்திருக்கிறாராம்.

யாழ்ப்பாணத்தில் சர்க்கரை உற்பத்தி

கொழும்பு, டிச. 3—

யாழ்ப்பாணத்தில் (வட இலங்கை) இரண்டு சர்க்கரை உற்பத்திச் சாலைகள் நிறுவுவதற்கென வாய்ப்பு வசதிகளிருக்கின்றன வென்று, சர்க்கரை ஆராய்ச்சி வல்லுநராகிய பேராசிரியர் டி. ஜி. வாலாவக்கர் தெரிவித்துள்ளார் இப்பகுதியில் கரும்புப் பயிரை லாபகரமாய்ச் செய்யலாமென்றும், 20,000 டன் சர்க்கரை தயாரிக்கும் வகையில் இரு தொழிற்சாலைகளை நிறுவலாமென்றும், இதனல் ஏராளமான மக்களுக்கு வேலை கிடைக்கவும் ஏதுவாகுமென்றும் பேராசிரியர் வாலாவக்கர் கருத்துத் தெரிவித்துள்ளார். சர்க்கரை உற்பத்தி சம்பந்தமாக ஆய்வுரை கூற, இவரை இலங்கை சர்க்கார் இந்தியாவினின்றும் அழைத்திருந்தது.

பருவமழை பொய்த்து விளைச்சல் நிலை பாதிப்பு

இவ்வாண்டில் வடகிழக்குப் பருவமழை பொய்த்துவிட்டதால், தஞ்சை மாவட்டத்தில் சம்பா சாகுபடி எதிர்பார்த்ததுபோலிருக்கப் போவதில்லையென்றும், மிகவும் குறைவாகவே இருக்குமென்றும் விவசாய டைரெக்டர் தெரிவித்துள்ளார். தெற்குப் பகுதியில் பருவமழை முற்றிலும் பொய்த்துவிட்டதும், சர்க்கார்களில் புயலடித்ததும் நிலைமையை மேலும் மோசமாக்கிவிட்டனவென்று அவர் குறிப்பிட்டுள்ளார். மழையில்லாமையால் சேலம், கோவை, வடார்க்காடு; தென்னார்க்காடு, செங்கற்பட்டு, திருநெல்வேலி பகுதிகளிலும் விளைச்சல் பாதிப்புற்றிருப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வாதிகாரத்துக்கு சப்பைக் கட்டா?

மனித உரிமையைக்காக்கும் மகத்தான அரசியலாம்!

இந்திய அரசியல் அமைப்புக்கு லண்டன் “டைம்ஸ்” ‘சபாஷ்’ போடுகிறது

“யூனியனுக்கு பலத்த மத்திய சர்க்கார் இருக்க வேண்டும். குலையச் செய்யும் சக்திகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் வெவ்வேறு உறுப்புகளுடன் சரிவர நடந்துகொள்ளவும் மத்திய சர்க்காருக்கு நல்ல பலம் வேண்டும்.

எந்த அரசாங்கமும் தயாரித்திராத மிக்க விரிவான மனித உரிமை சாஸனம் ஒன்றை தங்கள், அரசியல் திட்டத்தில் அவர்கள் சேர்த்திருக்கின்றனர். இவ்வுரிமைகள் பறிக்கப்பட்டால், நீதிமன்றம் மூலம் நீதி பெற தனி நபருக்கு வசதி அளிக்கப்பட்டிருக்கிறது.

சமூக பொருளாதார தர்மத்தை அனுசரித்து, சில வழிகாட்டி கொள்கைகளும் விதிக்கப் பட்டிருக்கின்றன.

சட்டங்களை வகுப்பதில் அரசாங்கம் இதைப் பின்பற்ற வேண்டும் இவற்றை எந்த நீதிமன்றத்திலும தீர்ப்பாகப் பெற முடியாது”

என்று லண்டன் “டைம்ஸ்” பத்திரிகை இந்திய அரசியல் திட்டம் பற்றி தீட்டியுள்ள ஒரு தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

“டைம்ஸ்” பத்திரிகை இந்திய அரசியலமைப்பைப் புகழ்வதில் ஆச்சரியமில்லை. ஏகாதிபத்திய முகாமில் இடம்பெற்றுவிட்டது இந்தியா. ஆகவே அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் இந்திய அரசியலை ஆதரித்தே தீரும். ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இந்தியாவின் வாழ்வோடு அந்நாடுகள் தம்முடைய வாழ்வையும் பிணைத்துக்கொண்டுவிட்டன.

ஆனல் “டைம்ஸ்” பத்திரிகையின் கூற்றுகளைச் சற்று ஆராய்ந்து பார்க்கின்றபோது, அது இந்திய அரசியலின் உண்மையான தோற்றத்தைத் தெளிவாக உணர்ந்து கொண்டுள்ளது என்பது நன்கு புலப்படும். மத்திய சர்க்கார் பலமுள்ளதாக இருக்க வேண்டியது அவசியமே என்று குறிப்பிட்ட அதே ஏடு, பிற பகுதிகளில் சமூக பொருளாதார தர்மத்தை அனுசரித்து சட்டங்களை வகுக்கவேண்டும் என்றும், இவற்றை எந்த நீதிமன்றமும் தீர்ப்பாகத்தர முடியாது என்றும் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. நீதிமன்றத்தால் அளிக்க முடியாத தர்மநீதியும் இருக்கிறது; அதை சட்ட நீதிக்கு ஒத்து வரும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கூற வேண்டிய நிர்பந்தம் “டைம்ஸ்”க்கு ஏன் வந்தது என்பது சிந்திக்கவேண்டிய விஷயமாகும். வெளிக்கு இந்திய அரசியலை ‘டைம்ஸ்’ புகழ்ந்து பேசினலும் இத்திட்டத்தின் மூலம் மனித உரிமை பறிபோக மார்க்கமுண்டு என்பதை உள்ளூர உணர்ந்த காரணத்தாலன்றோ இத்தகைய தர்மோபதேசம் செய்ய முன்வந்துள்ளது அவ்வேடு!

எந்த அரசாங்கமும் தயாரிக்காத விரிவான மனிதஉரிமை சாஸனத்தை இந்தியா தயாரித்திருப்பதாகவும் அதே ஏடு குறிப்பிடுகிறது. இது “இக்கரைக்கு அக்கரை பச்சை” என்ற அளவிலேயே பண்றி உண்மையில் அல்ல. ‘டைம்ஸ்’ போற்றிப் புகழும், இந்திய மனித உரிமை ஏட்டளவோடுதானே யன்றி நாட்டளவில் இல்லை என்பது லண்டன் “டைம்ஸ்”க்கு எப்படித்தெரியும்? இங்கு நாளுக்கு நாள் சட்டங்கள் பறிபோகும் மக்களுரிமைகளை பல்லாயிரக்கணக்கான மைல் தொலைவிலிருந்துகொண்டு எங்ஙனம் அறிய முடியும் அவ்வேடு? இங்கு ‘இலட்சிய வாலாது’கள் தடைசெய்யப்பட்டு இன்னன. பேசாதே, எழுதாதே, நடக்காதே என்ற அடக்குமுறை தர்பார் நடப்பதும், 144 தடை உத்தரவு இல்லாத நாளே கிடையாது என்ற உண்மையும் அனுபவத்தில் காணும் நமக்கன்றோ தெரியும் இந்திய அரசினரின் மனித உரிமை சட்டத்தின் லட்சணம்!

ஐதராபாத் அரசியலமைப்பு சபை

அடுத்த மார்ச்சில் வேலை துவங்கவிருக்கும் ஐதராபாத் அரசியலமைப்பு சபையில், 26 முஸ்லிம்களும், 26 ஆதித்திராவிடரும், மூன்று மலைவாசிகளுமிருப்பரென்றும் மொத்த உறுப்பினர்கள் 200 பேர்களென்றும் தெரிகிறது. மொழிவாரியாகக் கூறுமிடத்து, தெலிங்கானவினர் 106 பேரும், மகாராஷ்டிரர் 52 பேரும், கர்நாடகர் 42 பேரும் இருப்பராம்.

இந்தியாவுக்கு ‘ஜாப்’ பென்ஸிலின்

இந்திய கவர்னர் ஜெனரல், பிரதமமந்திரி, உதவிப்பிரதமமந்திரி ஆகியோருக்கு ஜப்பான் அனுதாபமுள்ளவர்கள் கொண்டு வந்த பல பரிசுகளுடன் 90,00,000 யூனிட் பென்ஸிலினையும் கொண்டுவந்திருக்கின்றனர். இந்திய சுகாதார மந்திரியிடம் இது பரிசாக அளிக்கப்படும். —ஜனோப்

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

ஸ்ரீவில்லிபுத்தூர்-நகரக்கிளை

ஸ்ரீவில்லிபுத்தூர், நவ. 30—

20—1—4—ல் இங்கு நடைபெற்ற கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம்-ஸ்ரீவில்லிபுத்தூர் நகரக்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்: எஸ். இராமதாஸ்; துணைச்செயலாளர்:-எம். வன்னியராஜி, விளம்பர உறுப்பினர்:—பி. ஆர். ஏ. சுழல். ஏனைய செயற்குழுவினர்:—கருப்பையா; எஸ். செந்தியப்பன், கே.காலசாமி, ஏ. ஏமராஜ்.

● * *

திருவையாறு-நகரக்கிளை

திருவையாறு, நவ. 25—

20-11-49-ல் தோழர் அப்பாத்துரை தலைமையில் நடைபெற்ற தி. மு. க. அமைப்புக்கூட்டத்தில். "திராவிட முன்னேற்றக் கழகம் திருவையாறு (நகர சுற்றுவட்டக்) கிளை நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—என். சிங்காரவேலன், நிதி உறுப்பினர்:—சோமசுந்தரம். ஏனைய செயற்குழுவினர்:—அப்பாத்துரை, நடராசன், தனபாலன், பஞ்சாதம் (வைத்திலிங்கம்பேட்டை) சுப்பிரமணியம் (புனவாசல்) நடராசன், (திருப்பூந்துருத்தி) கோவிந்தராசன், (கண்டியூர்) சுந்தரம் (பனையூர்)

பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

* * *

சக்கராமல்லூர்—சிற்றூர்க்கிளை

(வ. ஆ.) சக்கரமல்லூர், நவ. 26

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 24—11—49-ல் தோழர் கச்சியப்பன அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—சக்கரமல்லூர் சிற்றூர்க்கிளை' நிறுவப்பட்டு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—வி. ஏ. நடராசன்; துணைச் செயலாளர்:-கே. இராமதாசு; நிதி உறுப்பினர்:-எம். விஜயகம்; விளம்பர உறுப்பினர்கள்:-கே. பார்த்தசாரதி, மா. சந்திரசேகரன். ஏனைய செயலுறுப்பினர்கள்:- க. கச்சியப்பன், எஸ். எஸ். தங்கவேல், ந. சுப்பிரமணியம், எம். வரதராசன், எம். வி. கோவிந்தன், பி. சி. வெங்கடேசன், எஸ். தியாகராசன், பி. கண்ணன், வி. பழனி, ...ன். நடேசன், பு. இராமாநதை, பி. எஸ். இராசகோபால், எம். இரத்தினசாமி, வ. மு. மாணிக்கம், கே. வரதன், வ. இராமசாமி, ஜி சுப்பிரமணியம், ஏ. பொன்னுசாமி, கே. சம்பந்தம். பின்பு நன்றி கூறுதலுடன் கூட்டம் முடிவுற்றது.

(வி-உ)

* * *

குருவிக்கரம்பை—சிற்றூர்க் கிளை

குருவிக்கரம்பை, நவ. 29—

இவ்வூர் திராவிடர் கழகக் கூட்டம் தோழர் ஏ. முத்துசாமி அவர்கள் தலைமையில் 28 11-49-ல் நடைபெற்றது. அதுபோது, இவ்வூர் திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம் — குருவிகரம்பை சிற்றூர்க்கிளை" என மாற்றியமைக்கப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-எம். மணி; துணைச் செயலாளர்:— ஏ. கருப்பையா; பொருள் உறுப்பினர்:—ே. முத்துசாமி; விளம்பர உறுப்பினர்:—ந. முத்துக்குமார்.

மற்ற செயலுறுப்பினர்கள்:—ச. சோமசுந்திரம், வி. ராமசாமி, ச சோமசுந்தரம், எஸ். வீரப்பன், எம். ஆறுமுகம், செய்யப்பன், ஆர். சண்முகம், வி. நடராசன், ச. சுந்தரம்.

(வி. உ.)

* * *

திருப்பத்தூர்—சிற்றூர்க்கிளை

திருப்பத்தூர் (இ. மா) நவ. 28-

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூரில் 27—11—49-ல் திராவிடரியக்கத் தோழர்கள் தோழர் எம். ஆண்டியப்பன் தலைமையில் கூடி, "திராவிட முன்னேற்றக் கழகம்—இராமநாதபுரம் சிற்றூர்க்கிளை' நிறுவினர். பின்பு புதிய செயற்குழு வொன்றும் அமைக்கப்பட்டது.

செயலாளர்:— பி. பி. எம். பிச்சை; பொருள் உறுப்பினர்:— பி. ஆர். முத்துராமன்; விளம்பர உறுப்பினர்:—வி. ஆர். கோவிந்தன். ஏனைய செயற்குழுவினர்:— எம். ஆண்டியப்பன், கே. காத்தமுத்து, அப்துல்காதர், ஏ. சேது.

(செ-ர)

● ● ●

அறுப்புக்கோட்டை—நகரக் கிளை

அருப்புக்கோட்டை, நவ 29—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 27—11—49 மாலை 6-மணிக்கு, புளியம்பட்டி திராவிடர் வாலிபர் சங்க அலுவலகத்தில் தோழர் சிவசண்முக சுந்தரனார் தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம் அருப்புக்கோட்டை நகரக் கிளை ' அமைக்கப்பட்டு,கீழ்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ச. காளிமுத்து. துணைச் செயலாளர்:—எஸ். செல்லையா; பொருள் உறுப்பினர்:—சிவசண்முகசுந்தரன்; விளம்பர உறுப்பினர்:—முத்துக்கனி. ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—எம். எஸ். இராமசாமி, கு. கணபதி, எஸ். சங்கரபாண்டியன், எம்.பெரியசாமி, வி. எஸ். நடராசன், அ. நாராயணன், ஏ. எஸ். அன்னாமலை, சே. சண்முகக்குமரன், அ. சுப்பிரமணியன், ச. நடராசன், சே. சண்முகவேலன், கே. சிவராமன், எஸ். மகாராசன், வி. பாலச்சந்திரன், கே. முத்தையா.

பின்பு தோழர் எம். எஸ். இராமசாமி நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

(வி-உ)

* * *

வாசுதேவநல்லூர்-சிற்றூர்க்கிளை

வாசுதேவநல்லூர், நவ. 29—

திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம், 27—11—49 ல் தோழர் க. தளவாய் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக் கழகம்-வாசுதேவநல்லூர் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, பின் வரும் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எஸ். சுப்பிரமணியம், பொருள் உறுப்பினர்:—வ. மு. கணபதி விளம்பரஉறுப்பினர்:- க. தளவாய். ஏனைய செயற்குழுவினர்:—கா. நடராசன், போ. குருசாமி, போ. பழனி, அ. ப. கல்யாணி.

பின்பு செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. (வி. உ.)

* * *

பட்டணம்-சிற்றூர்க்கிளை

பட்டணம், நவ. 29—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம, 27—11—49-ல் "மக்கள் மன்ற"க் கட்டிடத்தில், தோழர் சின்ன-இராயப்பனார் தலைமையில் நடைபெற்றது. தலைவர் சிறிதுநேரம் பேசினார். பின்பு "திராவிட முன்னேற்றக் கழகம்—பட்டணம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—என். செங்கோடு; துணைச் செயலாளர்:—பி. சி. சுப்பு, பொருள் உறுப்பினர்:—எஸ். பொன்னுசாமி; விளம்பர உறுப்பினர்:— இரா. முத்து. மற்ற செயற்குழுவினர்:—பண்டிதர் அப்பாவு, வரதராஜன், மு. கருப்புடையார்.

பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

பேரளம்—சிற்றூர்க்கிளை

பேரளம், நவ. 29—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம, 27—11—49-ல் தோழர் இரா. பாவாடை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, கல்லூரி மாணவர் தோழர் நா. நாகராசன் கழகம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்துப் பேசினார்.

பின்பு 'திராவிட முன்னேற்றக் கழகம்—பேரளம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, பின் வரும் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—நா. நாகராசன்; துணைச் செயலாளர்கள்:-சி. சுப்பிரமணியம்; கே. எம். கணபதி. பொருள் உறுப்பினர்:—மு. பக்கிரிசாமி; விளம்பர உறுப்பினர்:—கூத்தரசன். ஏனைய செயற்குழுவினர்:-ரெ. கணபதி, மு.முகம்மது சாலி, அ. தருமராசு, இரா. பாவாடை, உ. கருப்பையன், சோ. இராசையா, இரா. இலக்குவன்.

பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

(வி-உ)

● ● ●

பட்டிவீரன்பட்டி—சிற்றூர்க் கிளை

பட்டிவீரன்பட்டி, நவ. 30—

இவ்வூர் திராவிடர் கழகக் கூட்டம், 26-11-49-ல் தோழர் சி. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது பெரியாரின் தலைமையில் இனி பணியாற்ற இயலாதென்ற முடிவுடன், திராவிட முன்னேற்றக் கழகத்தில் அனைவரும் பணியாற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டு, "திராவிட முன்னேற்றக் கழகம்—பட்டிவீரன்பட்டி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டது. பின்பு கீழ்க்கண்ட செயற்குழுதேர்ந்தெடுக்கப்பட்டது

செயலாளர்:—கே. நடராசன்; துணைச் செயலாளர்:—டி. என். எம். நல்லபெருமாள்; பொருள் உறுப்பினர்:—சி. சிவப்பிரகாசம்; விளம்பர உறுப்பினர்:—ஆர். குருசாமி; ஏனைய செயலுறுப்பினர்கள்:—கே. சங்கரபாண்டியன், எஸ். கிருட்டிணன், எம். மல்லையா, பி. துரைசாமி, ஆர். அழகர்சாமி, டி. என். எஸ். மீனாட்சிசுந்தரம், டி. என். எம். நடராசன், சி. மதிப்பிரகாசம், என். பெருமாள், இராமச்சந்திரன், டி. வி. எஸ். நடராசன், ஏ. முத்து கிருட்டிணன், சி. நவமணி, கே. காசிராசன்,ஆர்.கருப்பையா.(வி-உ)

* * *

சீர்காழி—நகரக்கிளை

சீர்காழி, டிச. 3—

2—12—49-ல் தோழர் கே. கணேசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம்—சீர்காழி நகரக்கிளை' நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழுதேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— இரெ. சண்முகம்; துணை செயலாளர்:—வ. கஸ்தூரி; பொருள் உறுப்பினர்:-ஏ. கோவிந்தராசு; விளம்பர உறுப்பினர்:—இரா பாலகிருஷ்ணன், ஏனைய செயற்குழுவினர்:—ஆர். வடிவேலு, வி. செம்புலிங்கம், டி. எஸ். ராமு, என். சங்கரன், கே. கோவிந்தராசு, எஸ். கே. உத்திராபதி, எஸ். அப்துல் கரீம், பி. சுந்தரராசு, இரா. சி. மணியன், வி. ஜானகிராமன், கே. நாகப்பன், கே. ஏ. குருசாமி, ஐ. அப்துல் காசிம்.

பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

(வி-உ)

* * *

அங்கலக்குறிச்சி—சிற்றூர்க்கிளை

அங்கலக்குறிச்சி, டிச. 3—

பொள்ளாச்சி தாலுகா, அங்கலக்குறிச்சி தி. மு. க. அமைப்புக்கூட்டம், 30—11 49-ல், தோழர் பி. என். இராமாநுஜம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் பேசிய பின்பு, "திராவிட முன்னேற்றக் கழகம்-அங்கலக்குறிச்சி சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ஏ. சி. மயில்சாமி; துணைச்செயலாளர்: ஏ. எம். இப்ராகிம்; நிதி உறுப்பினர்:- ஏ. எம். காளிமுத்து; விளம்பர உறுப்பினர்:—ஏ. டி. நஞ்சப்பன்; ஏனைய செயலுறுப்பினர்கள்:— ஏ. எம். மாணிக்கம், ஏ. கே. பொன்னுசாமி, ஏ எஸ். மைதீன் பாட்சா, ஏ.எஸ். காஜா மைதீன், ஏ எஸ் நாச்சியப்பனார், ஏ. ஜே காதர்பாட்சா, ஏ. எஸ். நடராசன்.

பின்பு தலைவர் முடிவுரைக்குப் பின், செயலாளர் நன்றிகூற, கூட்டம் முடிவுற்றது.

(வி-உ)

* * *

சென்னை 13-வது வட்டம் நகர உட்கிளை

சென்னை, டிச. 5—

4—12—49 ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்—சென்னை நகர 13-வது வட்டம் உட்கிளை" நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—மா. சு. சம்பந்தம்; துணைச்செயலாளர்:— சண்முகசுந்தரம்; பொருள் உறுப்பினர்:— மா. இளஞ்செழியன்; விளம்பர உறுப்பினர்:—டி. பி. சம்பந்தன். மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாக தோழர்கள் மா. இளஞ்செழியன், மா. சு. சம்பந்தன் ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(செ-ா)

● ● ●

சென்னை பூங்காநகர்—நகரஉட்கிளை

சென்னை, டிச. 5—

சென்னை பூங்காநகர் (பார்க் டவுன்) தி. மு. க. அமைப்புக் கூட்டம், 3-12-49 மாலை 7-30 மணிக்கு காளப்ப ஆச்சாரித் தெரு, 5 எண்ணுள்ள இல்லத்தில்,தோழர்கே.திருவேங்கடம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பிறகு "திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை நகர பூங்காநகர் உட்கிளை" நிறுவப்பட்டது. பின்பு புதிய செயற்குழுவொன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—கே. திருவேங்கடம்; துணைச்செயலாளர்:—டி. வரதராஜன்; பொருள் உறுப்பினர்: சி. டி. சந்திரசேகரன்; விளம்பர உறுப்பினர்:—வி. நாகையா. பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

சென்னை 4-வது வட்டம்—நகர உட்கிளை

சென்னை, டிச. 5—

சென்னை 4-வது வட்டம் திராவிடர் கழகக் கூட்டம், 4-12 49-ல் இராமாநுஜ அய்யர் தெரு, 35 எண்ணுள்ள கழகக்கட்டிடத்தில். தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெருவாரியான கழகத் தோழர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அதுபோது இவ்வட்ட திராவிடர் கழகத்தை "திராவிட முன்னேற்றக் கழகம்—சென்னை நகர 4-வது வட்டம் உட்கிளை" என மாற்றி அமைத்துக் கொண்டு பணியாற்றுவதென தீர்மானிக்கப்பட்டது. பின்பு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ஆர். பாண்டியன்; பொருள் உறுப்பினர்:—கே. எம். கண்ணபிரான்; விளம்பர உறுப்பினர்:—எ. என். சுப்பிரமணியம் ஏனைய செயலுறுப்பினர்கள்:— எஸ். பொன்னுசாமி, எம். சேர்மென், என். தனபால், பி. மதுரை, பி. கே. மாரியப்பன், கே. குப்புசாமி, கே. கோவிந்தன், பாலு.

மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளாக தோழர்கள் கே. எம். கண்ணபிரான், ஆர். பாண்டியன் ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது.

(பொ-உ)

பாகிஸ்தான் விமானப்படை

ராயல் பாகிஸ்தான் விமானப் படையின் சேனாபதி, ஆர். எல். ஆர். அட்சிசன் போதுமான பயிற்சி விமானப் படையொன்றை நிறுவ பாகிஸ்தான் முடிவு செய்திருக்கிறதென்று, டிச. 5-ந் தேதியன்று விசித்து குறிப்பிட்டார். ராயல் பாகிஸ்தான் விமானப்படையும், ராயல் ஆஸ்திரேலிய விமானப்படையும் தங்களிடையே அதிகாரிகளை மாற்றிக் கொள்வது எவ்வளவு தூரம் சாத்தியமென்பதைக் கண்டறியவும், ஆஸ்திரேலியாவில் பாகிஸ்தான் விமானப்படையினர்க்குப் பயிற்சியளிக்கும் ஏற்பாடு செய்யவும் இவர் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளார்.

தன்னுடைய வருகையின் விளைவாக நற்பயனேற்படுமென்று, தான் கருதுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மோட்டார் எஞ்சின்கள் உற்பத்தி

1949 ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து அக்டோபர் 31-வரை 206 மோட்டார் எஞ்சின்களும், 35 டால்வேஸ்களும் இந்தியாவிலுள் உற்பத்தியாயின என்று மத்திய சட்டசபையில் 5-ந் தேதியன்று மந்திரி கோபால்சாமி அய்யங்கார் குறிப்பிட்டார் இந்தியாவிலேயே மோட்டார் எஞ்சின்கள் உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் பெரிதும் உருவாகிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நேருவின் அடுத்த பயணம்

பிரதம மந்திரி பண்டித நேரு அடுத்தஆண்டில் இந்தோனேஷியாவுக்குச் சென்று திரும்புவாரென்று தெரிகிறது. இந்தோனேஷியக் குடியரசின் துவக்க விழாவில் கலந்துகொள்ளுமாறே சுகர்ணோ அழைத்திருந்தாராம். ஆனால் அதற்கு வர இயலாமைக்கு வருந்தியும், அடுத்தாண்டில் அவசியம் வருவதாகவும் நேரு தெரிவித்துள்ளாராம்.

இந்திய அரசியல் துவக்க விழாவுக்கு வருகை தருமாறு நேரு சுகர்ணோவை அழைத்துள்ளாராம்.

பந்தயகளம்புகுமுன் பரிசோதனை செய்க

குத்துச்சண்டைக்காரர்கள் பற்றி மேயர் கருத்து

'குத்துச்சண்டைக் காரர்கள் களத்துக்குச் செல்லுமுன் அவர்கள் உடல் நிலையை டாக்டர்கள் பரிசோதிக்க வேண்டும்.'' என்று சென்னை மேயர் டாக்டர் பி. வி. செரியன் அண்மையில் பழைய வண்ணாரப்பேட்டையில் பந்தய விளையாட்டுக் கழகமொன்றில், தோழர் அருணாசலத்தின் படத்தைத் திறந்து வைத்துப் பேசியபோது குறிப்பிட்டார்.

விவசாயிகளின் தலையிலும் கைவைப்பதா?

வடநாட்டு ஆதிக்கம் இருப்பதால்தானே இந்தத் தொல்லை?

கிராம மக்கள் எழுச்சி பெற்றால்தான் நாடு விடுதலை பெறமுடியும்

புளியமங்கலத்தில் சத்தியவாணிமுத்து-என். வி. நடராசன் சொற்பொழிவு

புளியமங்கலம், டிச. 4— அரக்கோணத்தையடுத்த புளியமங்கலம் திராவிட முன்னேற்றக்கழகத்துவக்கவிழாப் பொதுக் கூட்டம், நேற்று மாலை 5-30 மணிக்குத் துவக்கப்பட்டு சிறப்புற நடந்தேறியது. இரயில்வே தொழிலாளர்களும்-சுற்றுப்புற கிராமவாசிகளும் உள்பட ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர்.

செயலாளர் தோழர் அம்பிகாபதி யாவரையும் வரவேற்றுப் பேசி, அரக்கோணம் தோழர் ஏ. எல். சி. சஞ்சீவி அவர்களைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஏ. எல். சி. சஞ்சீவி

தோழர்களே! தாய்மார்களே! திராவிட முன்னேற்றக் கழகம் எதற்காகத் துவக்கப்பட்டிருக்கிறதென்பதை தமிழ்நாட்டிலுள்ள அனைவரும் பெரும்பாலும் அறிந்திருப்பீர்கள். ஜாதியால், பிறப்பால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்பதும், கடவுள் பேரால் மக்களை மடமைக்கு அழைத்துச் செல்வதையும், நம் நாடு வடநாட்டு ஆதிக்கத்துக்கு அடிமைப்பட்டிருப்பதும் அறவேஒழிந்து சமதர்ம ஆட்சிய கநிலவ வேண்டுமென்பதே திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையாகும்.

அவைகளை விவரித்துபேசும்படி, தோழியர்சத்தியவாணிமுத்து அம்மையாரையும்,தோழர் என். வி. நடராசன் அவர்களையும் கேட்டுக்கொண்டு எனது முன்னுரையை முடிக்கிறேன் என்று கூறி முடித்தார்.

சத்தியவாணிமுத்து

தலைவரவர்களே! தாய்மார்களே! தோழர்களே! யான் இரண்டு ஆண்டுகளுக்கு முன் அரக்கோணத்துக்கு வந்த போது, பெரியார் தலைமையில் பணியாற்றும் ஓர் தொண்டராக வந்து சென்றேன். இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகப் பணியாளர்களில் ஒருவராக இங்கு வந்து அதன் கொள்கைகளை எடுத்துக் கூற முன்வந்துள்ளேன்.

எனினும், பெரியார் தலைமையில் எந்த கொள்கைகளுக்காகப் போராடி வந்திருக்கிறோமோ, அந்த கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, இன்னும் சீரிய அமைப்பு முறையில் அவைகள் நடைமுறையில் வரப் பாடுபடுவதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெளிப்படையான எண்ணமாகும்.

எனவே, அரசியலாரோ அல்லது எங்களுக்குள் மோதுதல் ஏற்படும், அதன் மூலம் திராவிட இயக்கத்தையே அழித்துவிடலாம் என்று, மனப்பால் குடிப்பவர்களோ யாராயிருப்பினும் அவர்கள் ஏமாற்றமடைய வேண்டியது தான்.

நமது மந்திரிகள் நாட்டை ஆளுவதில் திறமையற்றவர்களாயிருப்பினும் எதிர்கட்சியினரை வம்புக்கு இழுத்து நையாண்டி செய்வதில் மட்டும் சமர்த்தர்களாயிருக்கின்றனர்.

அப்போக்குடைய மந்திரிகளில் தலைச்சிறந்தவராக விளங்குபவர், கனங்கள் மாதவமேனனும், பக்தவத்சலமுமேயாகும்.

கம்பராமாயணத்தை வானளாவப் புகழ்ந்து, அதை எதிர்ப்பவர்களை நாக்கில் நரம்பின்றி தாக்குகிறார் மாதவமேனன்.

ராமாயணக் கதையில் மக்களின் ஒழுக்கத்துக்கு ஏற்ற கருத்து ஏதாவது இருக்கிறதா? வீரம், தன்மானம், நன்றியறிதல், கற்பு ஆகிய எந்த விதமான நல்லொழுக்கமாவது ராமாயணம், மகாபாரதங்களிலிருப்பதாக மந்திரி மாதவமேனன் மட்டுமல்ல; எந்த சாஸ்திரிகளும் கனபாடிகளும், சங்கராச்சாரிகளும் ஜீயர்களுந்தான் கூற முடியுமா என்று அறை கூவியழைக்கிறேன்.

புராணக் கதைகள் மூலம், ஜாதிப் பிரிவுகளும் மூடப்பழக்கவழக்கங்களும், ஒரு ஜாதிக்கொரு நீதியென்ற காட்டுமிராண்டித் தனத்தையும் நிலைபெறச் செய்யப்படுகிறதேயல்லாமல், மனிதத் தன்மையை வளர்க்க முடிகிறதாவென்று மாதவமேனன் களைக் கேட்கிறேன்.

அதே போன்று நமது தேய ஒலிபாகிய நாட்டுப் பிரிவினையையும் மாதவமேனன் - பக்தவத்சலங்கள் கேலி செய்கின்றனர்.

பொறுப்புள்ள மந்திரிகளாயிருந்தால் இவ்வாறு பேசமாட்டார்கள். நம் நாட்டு வரிப் பணங்களையெல்லாம் தேசியம் என்ற பெயரால், வடநாட்டு மத்திய ஆட்சியினர் வசூலித்துக்கொண்டு போய், நம் சர்க்கார் அவர்களிடம் கடன் கேட்டு அவதிப்படும் இழி நிலையைத் தேடிக்கொள்வார்களா?

நம்தென்னாட்டில் இயற்கை வளப்பங்களும், வீரர்களும் சிறந்த உழைப்பாளிகளும் அறிஞர்களும், தியாகிகளும் இருக்க, இவைகள் எல்லாவற்றிலும் நம்மைவிடத் தாழ்ந்த நிலையிலுள்ள வடநாட்டான் நம்மை ஆளுவதா?

திராவிடத்தின் அறிஞர்களை வடநாட்டுக்காரர்கள் தங்களின் ஆதிக்க வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டு, பின்னர் செல்லாக் காசாக்கி விடுகின்றனர்.

தோழர் ஆர். கே. சண்முகம், அரசியல் நிபுணர் சர். ஏ. ராமசாமி போன்றவர்கள் இன்று எங்குயிருக்கிறார்கள் என்று கேட்க வேண்டிய நிலையில் அரசியல் வானில் அஸ்தமித்து விட்டார்களே! இந்நிலையிருக்கலாமா?

தாழ்த்தப்பட்ட பெருஞ் சமுதாயத்தின் தலைவர் டாக்டர் அம்பேத்காரை காங்கிரசார் ஒரு காலத்தில் நாக்கில் நரம்பின்றி தாக்கினர். தூற்றினர். தேசத் துரோகி, மதத் துரோகி, பார்ப்பனத் துரோகியென்றெல்லாம் வசை புராணம் பாடினர்.

இன்று அவரது அறிவின் உதவியை வேண்டி நின்று புதிய அரசியலை தங்கள் ஆதிக்கத்துக்கு ஏற்றதைப்போல வகுத்துக்கொண்டனர் வடநாட்டினர். டாக்டர் அம்பேத்கார் அவர்களே இதை வெளிப்படையாகக் கூறிவிட்டார்.

இவ்வாறு நமது இன அறிஞர்களும், நிபுணர்களும் வடநாட்டுக்காரர்களால் கறிவேப்பிலை போன்று உபயோகப்படுத்தும் நிலை மாற வேண்டும். அவர்களது அறிவும் ஒத்துழைப்பும் நம் நாட்டுக்கு இருந்திருந்தால் எவ்வளவோ முன்னேறியிருக்க முடியும்.

காங்கிரஸ் அதிகாரம் எதிர்காலத்தில் மீண்டும் அம்பேத்காரையே தூற்றத்தான் போகிறது!

எனவே, நம் நாடு நமக்கு என்றிருப்பின், பாட்டாளி முதல் அறிஞர்வரை தன்மானமுடன் வாழ முடியுமேயல்லாது, வடநாட்டு ஆதிக்கம் இருக்கும் வரை எல்லாத் துறையிலும் கேவல நிலையில் தான் இருக்க நேரிடும்.

இதற்காகவே திராவிடநாடு தனியரசாக வேண்டுமென்று, திராவிட முன்னேற்றக்கழகம் கூறி பணியாற்றி வருகிறது. என்றும் மற்றும் சமுதாய எழுச்சி பற்றியும் விரிவாகப் பேசினார்கள்.

என். வி. நடராசன்

"தலைவரவர்களே! தோழர்களே! வடநாட்டு ஆதிக்கம் வர வர நம் திராவிட சமுதாயத்தின் உயிர்நாடிக்கே ஆபத்தை விளைவிக்க ஆரம்பித்துள்ளது.

நமது மந்திரிகள் தான் பாவம், அதிகாரம் ஒன்றுமேயில்லாத சப்—ஏஜெண்டுகள்

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

போகிற போக்கிலே...

"இரா ரஹஸ்யத்தை ராஜாஜி விளக்குகிறார்"

—செய்தித்தலைப்பு

கேட்டவர்கள் காதில ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டாமோ!

* * *

"பொது நலனுக்கான எந்த வேலையை செய்தாலும் அது புனிதமானதே"

—சி. ஆர்.

அந்த வேலைக்குத் தனி ஜாதியை சிருஷ்டித்து, அவர்களைத்தானே குறிக்கிறார் என்கிறது மனஸ்மிருதி!

* * *

"சீனக் கம்யூனிஸ்டுகள் ஆதிக்கத்திலும், முதலாளித்துவம் கலந்த பொருளாதாரமே காணப்படுகிறது"

—பண்டித நேரு

இந்தியாவின் புதிய அரசியல் நகலொன்றை அனுப்பி வைத்தால் சரியாகிவிடுகிறது!

• • •

'ராஜஜிக்கும் அவருடைய சகாக்களுக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்'

—கவர்னர் பவநகர்

தாங்கள் மட்டுமா, 'இஸ்டேட்' ராஜாக்கள் அத்தனை பேரும், அவர்களின் குடும்பமும், சுற்றமும்தலைமுறை தலைமுறையாய் கடமைப்பட்டவர்களாயிற்றே!

* * *

"பாதரசத்தை தங்கமாக்க முடியும்; ஆனால் செலவுதான் அதிகம்"

—செய்தி

சகாரா பாலைவனத்தைச் சமுத்திரமாக்கமுடியும்; ஆனால் தோண்டுகிற செலவு தான் அதிகமாகும்!

• • •

'வட இந்தியாவுக்கு வெட்டுக்கிளி ஆபத்து நீங்கியது"

—செய்தித் தலைப்பு

வெட்டுக்கிளி நீங்கவில்லை போலும்!

• • •

"ஐ. நா வில் சீன தூது கோஷ்டி பஜ்டி"

—செய்தித்தலைப்பு

பலபேருக்கு இது பிடித்திருக்காது. பல்டி பழைய காலத்து விளையாட்டல்லவா!

* * *

"காந்தியடிகள் வாரசாகிறார் சி ஆர்"

காந்தியடிகளுக்குத் தான் நம்பிக்கைக்குகந்த பிள்ளைகள் இருக்கிறார்களே!

* * *

'வடபீகாரையும் தென் பீகாரையும் இணைக்க, காவிரி மீது ரயில்பாலம் கட்டுவதற்கான பூர்வாங்க நில அளவு வேலையை பீகார் சர்க்கார் மேற்கொண்டிருக்கிறது'

—செய்தி

இரு பீகாரையும் இணைக்க இதுவல்ல சரியானவழி. பிரிட்டனிலுள்ள தேம்ஸ் நதி மீது பாலங்கட்ட தென்னாப்பிரிக்க சர்க்கார் வேலை மேற்கொண்டால் இரு பீகாரும் இருகித் தழுவிக்கொள்ளும்!

• • •

"யோக்யப் பொறுப்பும் திறமையும் உள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கவும். அப்படியானால்தான் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறும்"

—பிரதமர் ராஜா.

இனியுமா இதைச் சொல்ல வேண்டும் பொதுமக்களுக்கு!

* * *

"பொதுஜன ஆதரவின்மையால் விவசாய மசோதாவைக் கைவிட சென்னை சர்க்கார் முடிவு செய்துவிட்டனர்."

—செய்தி

யாரய்யா, அந்தப் 'பொது ஜனம்'!

* * *

"அர்த்தமற்ற மாஸ்கோ பக்தி"

—செய்தித் தலைப்பு

அர்த்தமுள்ள பக்தியென்று ஒன்றுண்டுபோலும்! பக்தியென்பதே அர்த்தமற்ற செயல்தானே!

சென்னை நகர சீரமைப்புத் திட்டங்கள்

சென்னை, டிச 6— சென்னை நகர அபிவிருத்தி டிரஸ்ட், நகர அபிவிருத்திக்கான எட்டு அல்லது ஒன்பது திட்டங்களை சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறதென்றும், சர்க்கார் அங்கீகாரத்தை டிரஸ்ட் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரியவருகிறது.

புரசைவாக்கத்தில் நகர அபிவிருத்தி டிரஸ்டினால் ஏற்படுத்தப்பட்ட விஸ்வாச லாட்ஜ் திட்டம் முடிவடைந்துவிட்டது. இதன்படி ஜர்மன் ரோடு அருகாமையிலுள்ள 12 ஏக்கர் நிலங்கள் மத்தியதர வகுப்பினருக்கு வீடுகட்டுவதற்காக விற்கப்படுமாம். இப்பொழுது அங்கு தெருவிளக்குகளும், சாக்கடைத் திட்டங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

சைதாபேட்டை தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் சிமெண்ட் பிளாக்குகள், மத்தியதர வகுப்பினருக்கு மலிவு விலையில் கிடைக்க அபிவிருத்தி டிரஸ்ட் ஏற்பாடு செய்துவருகிறது.

இனி நடப்பவை

செங்கற்பட்டு — இவ்வூர் ஸர். கொலம்பா உயர்நிலைப் பள்ளியில் 8—12—49 வியாழன் மாலை 4-மணிக்கு கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் நினைவு நாள் கொண்டாடப்படும். தலைமையாசிரியர் தோழர் ஏ. எஸ். ஜான்சன் எம்.ஏ., எல்.டி. தலைமைவகிப்பார். தோழர் இரா. செழியன் எம். ஏ., அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

இந்திய மருத்துவமுறை ஆராய்ச்சி

ஆயுர்வேதம், யூனானி மருத்துவமுறை ஆராய்ச்சிகளைப் பெருக்குவதற்கான விரிவுடைத் திட்டத்தைத் தயாரித்துதவுமாறு இந்திய சர்க்கார், ஒன்பது டாக்டர்களடங்கிய கமிட்டி யொன்றை நிறுவியுள்ளனர். டாக்டர் ஜி. ஜி. பண்டிட்டே இக் கமிட்டியின் தலைவராவார்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

10—12—49

சக்காமல்லூர் :— சி. பி. சிற்றரசு

11—12—49

செய்யூர் :— என். வி. நடராசன், எம் சின்னையா.

வாணியம்பாடி :— சி. என். அண்ணாத்துரை, சி. பி. சிற்றரசு.

தஞ்சாவூர் :— இரா. நெடுஞ்செழியன்.

அண்ணாவின் நூல்கள்

நடும ஏடும்	0	6	0
சிங்காரவேலர் ...	0	4	0
பொன்மொழிகள் ...	0	8	0
குடும்ப விளக்கு 1 (புரட்சிக் கவிஞர்)	0	6	0
வாழ்க திராவிடம் (அன்பழகன் M A)	0	4	0
தங்கத் தாமரை (இல்லை வில்லாளன்)	1	0	0
காஞ்சி சட்டைப் படை (செல்வராஜ்)	0	3	0
உலகம் கண்ட திராவிடம்	0	2	0
தமிழ் வாத்தியார் ...	0	12	0
கடவுளால் ஆகாதது ...	0	8	0
சுதந்திர இந்தியா (நேதாஜி)	0	10	0
உவமை நயம் ... (பாரதிதாசன் கவிதை நயங்கள்)	1	0	0

வணிகர் கழிவு 25%

பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—1.

கருப்புவாதத்தை ஒழித்து, பார்ப்பனீயத்தைப் புதைத்து, சுரண்டல் கூட்டத்தை ஒடுக்கி, பாட்டாளிகளை வாழ்விக்க மதுரையிலிருந்து...

சங்குநாதம்

திராவிட முன்னேற்ற வாரஇதழ்

ஆசிரியர் குழு:—

பெரி. சுவாமிநாதன், மதுரைமன்னன், க. சி. அவியபெருமாள்

1—1—50 முதல் ஞாயிறு தோறும் வெளிவரும்

தனிப் பிரதி .... 0—1—6

வருடச் சந்தா .... 4—8—0

எல்லா ஊர்களிலும் முன் பணம் கட்டக்கூடிய தீவிர நோக்கமுள்ள விற்பனையாளர்கள் தேவை.

விவரங்கட்கு :— நிர்வாகி, 'சங்குநாதம்' அலுவலகம், 166, வடக்குமாசி வீதி, மதுரை.

வ. ஆ. வேலூர் தி. மு. கழகம்

தோழர் இரத்தினவேலு கமிட்டியிலிருந்து நீக்கப்பட்டார்

வேலூர், நவ. 28—

27-11-49-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை யன்று காலை 9 மணிக்கு வேலூர் நகர திராவிட முன்னேற்றக் கழகக் கமிட்டிக் கூட்டம், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் கூடி, கீழ்கண்டவாறு ஐந்து தீர்மானங்களை நிறைவேற்றிற்று.

(1) கடந்த 16—10—49—13-11-49 ஆகிய நாட்களில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களின் வரவு செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டது.

(2) 20 11-49ல் நடந்த திராவிடர் கழகப்பொதுக் கூட்டத்தில் நடந்த கலவரத்தின் முழு உண்மைத் தகவல்களை, தி. மு க. பொதுச் செயலாளர் கேட்டிருந்ததற்கிணங்க, நகரக்கிளைக்கழகச் செயலாளர் அனுப்பிவைத்த அறிக்கையின் தகவல் அங்கீகரிக்கப்பட்டது.

(3) 20-11-49ல் நடைபெற்ற கூட்டத்தில், தோழர் இரத்தினவேலு உண்மை உணர்ச்சியின் விளைவாகவே நடந்துகொண்டதாகக் குறிப்பிட்டாலும், அவரது செயல் முன்னேற்ற கழகத்தின் கண்ணியத்திற்குப் பங்கம் விளைவிப்பதாக இருப்பதால், அவர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படியாக பொதுச்செயலாளர் இட்ட கட்டளையை நிறைவேற்றும் வகையில் தோழர் இரத்தினவேலு அவர்களை ஒரு ஆண்டு காலத்திற்கு (27—11—49 லிருந்து 26—1—50 வரையில்) கமிட்டியிலிருந்து விலக்கி வைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

(4) இச் செய்தியைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் உரிமை கழகச் செயலாளருக்கு அளிக்கப்பட்டது.

(5) 25-12-49ல் ஒரு பொதுக் கூட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. (வி-)

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

மானேஜர் "மாலை மணி"

திருச்சி மாவட்ட தி. மு. கழக

மாநாடு

1-1-1950ல் திருச்சியில் நடைபெறும்

விவரம் பின்னால்

"மணிலாப்பிண்ணாக்கு மானிடர்க்குகந்ததே"

உணவு மந்திரி கூறுகிறார்

அர்ஜென்டைனாவிலிருந்து 3,90,000 டன் சோளம் இறக்குமதி செய்வது என்பது தவிர, 1950-ம் ஆண்டுக்கு வேறு இறக்குமதித்திட்டமெதுவும் இதுவரை ஏற்பாடாகவில்லையென்ற தகவலை உணவு மந்திரி ஜெயராமதாஸ் தௌலத்ராம் 5-ந் தேதி மன்ற சட்டசபையில் வெளியிட்டார்.

மணிலாப் பிண்ணாக்கு மாவை, சோளமாவோடு சேர்த்து சாப்பிடுவது, உடலுக்குகந்ததேயாகுமென, ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் மந்திரி தெரிவித்தார்.

ஏஜண்டுகள் தேவை

கீழ்க் கண்ட இடங்களுக்கு நமது 'மாலை மணி'யை விற்பனை செய்ய, முன்பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை.

1 கடயநல்லூர்
2 உதகை
3 ராசிபுரம்
4 துவரங்குறிச்சி
5 அம்பாசமுத்திரம்
6 ஆலந்தூர் (இராமநாதபுரம் ஜில்லா)
7 பாப்பா நாடு
8 சென்னிமலை

மானேஜர் "மாலை மணி" சென்னை

விவசாயிகளின்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]—

போல ஆட்சிபீடத்தில் அமர்ந்து, மாதா மாதம் தவறாமல் சம்பளமும் கிம்பளமும் பெறுகின்றனர். போதாக்குறைக்கு, காங்கிரஸ் பிரசாரகர்போல சுற்றித்திரிவதையே வாடிக்கையாகக்கொண்டுவிட்டனர்.

இலங்கையில் உள்ள பத்து லட்சம் தமிழர்களின்-தன்மானத்தைக் காக்க நம் சர்க்காருக்குத் திறமையில்லை. விலைவாசிகள் விஷம்போல் ஏறும் கொடுமையை ஒழிக்க, மார்க்கம் இல்லை. வேலையில்லாத்திண்டாட்டத்தை ஒழிக்க, வகையில்லை. கள்ளமார்க்கெட்காரரின் கொட்டத்தை அடக்கவும் திறமையில்லை நாட்டில் தலைவிரித்தாடும் ஜாதி இறுமாப்பை ஒழிக்கவும் மனம் இல்லை. மதுவிலக்கு என்ற பெயரால் மீண்டும் மது அருந்த புதிய வழி காணப்படுகிறது. கஞ்சா-அபின் முதலியவைகளை விட கொடுமையாகிய கிண்டிரேஸ் பந்தயத்துக்கும் வழிவிடப்பட்டிருக்கிறது. இங்கு வரும்படியான வருமான வரியில் பல கோடி ரூபாயை வடநாட்டு ஆதிக்கம் கொண்டுபோவதற்கும் வணக்கம் செலுத்துகிறது.

சிதம்பரனாரும் சிங்காரரும் சீரழிந்தது இதற்காகவா?

இவ்வளவு கொந்தளிப்புகளிடையே நம்நாட்டு மக்கள் தவிக்கும்போது அவைகளைத் தீர்க்க வழிவகை செய்யாததுடன் விவசாய மக்கள் தலையிலும் கைவைக்க இந்த அரசாங்கம் முன்வந்துள்ளது. காலா காலத்தில் பருவமழையின்றி -- வானத்தை அண்ணாந்து பார்க்கும் விவசாய மக்களின் வயற்றெரிச்சலைக் கிளறுவதாகவே நிலைமை இருக்கிறது. இந்நிலையில் வடநாட்டு ஆதிக்கம் கொடுக்க மறுத்த 6 கோடி ரூபாயை, விவசாய மக்களிடம் முன்னதாகவே கடன் என்ற பெயரால் வசூலிக்கப்போகிறார்களாம்!

தோழர்களே! இந்த ஆட்சி மக்களாட்சியா? காட்டுமிராண்டித்தனமான கூட்டுக் கொள்ளையாட்சியா என்பதை உங்கள் முடிவுக்கே விட்டுவிடுகிறேன். இவ்விதக் கேடுபாடுற்ற கொடுமை மிக்க சுயராஜ்யத்திற்காகவா, அன்று நமது கப்பலோட்டிய வீரத் தமிழர் சிதம்பரனாரும், பொதுவுடமை சிற்பி சிங்காரவேலரும், மற்றும் பல தலைவர்களும்—கோடான கோடி மக்களும், தியாகம் செய்தனர்—பாடுபட்டனர் தேசிய விடுதலைக்கு, என்று கேட்கிறேன்.

சர்வாதிகாரத்தை ஒழித்து, சமதர்ம ஆட்சி காண்போம்!

எனவே, இக்கொடுமைகளை எல்லாம் ஒழித்து, பாட்டாளி மக்களின் உரிமையை நிலைநாட்டும் உண்மையான சுயராஜ்யம் பெறுவதுதான், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாகும். காங்கிரஸ் மந்திரிகளை — பதவியிலிருந்து ஓட்டிவிட்டு, நாங்கள் அங்கு சென்று உட்காருவது எங்கள் நோக்கமல்ல. யார் ஆண்டாலும் சரி, உழைப்பவருக்கு உரிமையையும், உழுபவர்களுக்கு சுகபோக மிராசு இல்லாமையும் ஆன அடிப்படையில் ஆட்சி செலுத்தவேண்டும். அஃதில்லாதவரை, வடநாட்டு ஆதிக்கமோ, அல்லது அதைவிட பெரிய ஆதிக்கங்கள் வளர்ந்தாலும், இறுதியில் அவைகள் சரிவுற்று, தென்னாட்டுச் சமதர்ம ஆட்சி நிலவியே தீரும்.

இப்பேர்ப்பட்ட எங்களுடைய கொள்கை, கோட்பாட்டுக்கு நாட்டுரிமை மக்களுரிமை வேட்கையுடைய எல்லா முற்போக்குத் தோழர்களுடைய ஒத்துழைப்பையும் ஆதரவையும் வேண்டி நிற்கிறது, திராவிடமுன்னேற்றக் கழகம்.

முக்கியமாக கிராமாந்திரங்களிலுள்ள விவசாயத்தோழர்களும் எங்கள் முயற்சிக்கு ஆதரவு தர வேண்டுகிறோம். நம் நாட்டு சர்க்காருக்குப் பூரண அதிகாரம் இல்லாதவரை, எந்தப் பேரால் ஆட்சி நடைபெற்றாலும், அது மக்களுக்கு நன்மை பயக்க முடியாது என்பதை நினைவூட்டுகிறேன்" என்றும் மற்றும் தொழிலாளர் பிரச்னைபற்றியும், அரசியலைப் பற்றியும் சுமார் 2 மணி நேரம் சொற்பொழிவாற்றியதோடு, கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் தக்க பதில் கூறினார். பின்னர், தலைவர் முடிவுரை கூற, செயலாளர் நன்றி தெரிவிக்கக் கூட்டம் இரவு 9 மணிக்கு இனிது முடிந்தது.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைபூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G. முனியப்பமுதலியார், மதுரை.

வானொலி

(7-12-49 புதன் கிழமை)

சென்னை

[211 3 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
7-30 கே. சொக்கலிங்கம்-பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8 15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-30 கே. குழந்தை—வயலின்

பிற்பகல் :

12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்நிலைப் பள்ளிகளுக்கு
2-45 குரல்வகை (இ. த.)

மாலை :

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-30 சி. கதிர்வேல்பிள்ளை—நாதஸ்வரம்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 சிதாமணி—பாட்டு

இரவு :

7-15 தமிழில் செய்திகள்
7-30 குரல்வகை (இசைத்தட்டு)
8-15 எஸ். பாலசந்தர்— வீணை
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-30 வி. தட்சிணாமூர்த்தி பாட்டு
10-30 முடிவு.

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
7-30 என். எஸ். சந்திரசேகரன் -பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8 15 என். கேசி—புல்லாங்குழல்
8-30 எஸ். நரசிம்மா—வீணை

பிற்பகல் :

12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு
1-00 சதம்பம் (இ. த.)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 பெண்ணுலகம்
2-00 தமிழில் செய்திகள்
2-10 விஸ்வநாத அய்யர்—வயலின் (இ. த.)
2-15 உயர்நிலைப் பள்ளிகளுக்கு

மாலை :

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-00 எஸ். நரசிம்மா—வீணை
5-40 இசைப் பயிற்சி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு :

7-15 தமிழில் செய்திகள்
7-30 சித்ரகானம் (இ. த.)
7-45 யோ. ராஜநாயகம்—பேச்சு
8-00 குரல்வகை இசைத்தட்டு
8-15 சென்னையிலிருந்து
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 மூன்று வயலின்கள் (அ.இ. ரே. வித்வான்கள்)
9-35 நீங்கள் கேட்டவை
10-00 முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumalai Chetty Street, Madras-1